DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 166 /2023
**Depositions of PW 4 Witness for**

| Name | ராஜமுனியாண்டி | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th Day of October 2025

Signature of Witness.

**24-10-2025**
எதிரி ஆஜர்.
**முதல் விசாரணை**

நான் தற்போது மேலநிறைமதி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். மேலநிறைமதி ஊராட்சி மன்ற தலைவராக இருந்து வந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 25.05.2023 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணியளவில் நானும், தங்கமுனி என்பவரும் எங்கள் வீட்டிலிருந்த போது எம்.புதுப்பட்டி போலீசார் வந்து சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். தயார் செய்த பார்வை மகஜரில் நானும், தங்கமுனி என்பவரும் கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் **அ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, படித்து

பார்த்து தான் கையொப்பம் செய்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து தான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல, என் வீட்டு பக்கத்தில் போலீசார் படம் வரைந்த இடத்தில் தான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். எனது வீட்டிலிருந்து சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 30 மீட்டர் இடைவெளியில் உள்ளது. அ.சா.1 புளுகாயிம்மாள் எனக்கும், என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த தங்கமுனி என்பவருக்கும் மாமியார் என்றால் சரிதான். அ.சா.1 புளுகாயிம்மாள் எனது மாமியார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.